மாதத் தேர்வு – அக்டோபர் 2024

வகுப்பு – 12

பொதுத்தமிழ்

நேரம் : 45 நிமிடங்கள் மதிப்பெண்கள் : 25

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளி 7X1=7

1. கவிஞர் நகுலனின் இயற்பெயர்

அ) சோமசுந்தரம் ஆ) அப்பாவு இ) நாராயணசாமி ஈ) துரைசாமி

2. Cinemetography என்பதன் சரியான தமிழ்ச்சொல்

அ) ஒலி விளைவு ஆ) ஒலிப்பதிவு இ) ஒளிப்பதிவு ஈ) ஒளி விளைவு

3. பொருத்துக

அ) ஆமந்திரிகை - 1. பட்டத்துயானை

ஆ) அரசு உவா - 2. மூங்கில்

இ) கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்

ஈ) கழை - 4. எடை அளவு

அ) 3142 ஆ) 4213 இ) 1234 ஈ) 4321

4. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) இளம்பூரணர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) சிவஞான முனிவர்

5. சின்னையா கணேசனுக்கு சிவாஜிகணேசன் என்று பெயரிட்டவர்

அ)தந்தை பெரியார் ஆ)பாரதிதாசன் இ அறிஞர் அண்ணா ஈ) வ.உ.சிதம்பரனார்

6. 'தொல்நெறி என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) தொழிற்பெயர்

7. பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார் - இப்பாடல்வரி உணர்த்தும் மெய்ப்பாடு ------------

அ) பெருமிதம் ஆ) வெகுளி இ) நகை ஈ) இளிவரல்

II.விடையளி 7X2=14

8. ஒரு முகஎழினி, பொருமுக எழினி – குறிப்பு வரைக

9. 'நஞ்சுண்பவர்' என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

10. பாவிகம் - விளக்குக

11. புணர்ச்சி விதி தருக : அ) பெருந்தேர், ஆ) தலைக்கோல்

12. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

13. சிவாஜிகணேசன் பெற்ற விருதுகள் யாவை?

14. உறுப்பிலக்கணம் தருக: அ) மருட்கை ஆ) தொழுதனர்

III. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 3+1=4

15. 'குழல்வழி ' எனத் தொடங்கும் சிலப்பதிகாரம்

16. 'அறிவற்றம' … எனத் தொடங்கும் குறள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com